நெடுங்குணம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திருமதி.சகுந்தலா வேலாயுதம்,

ந.க. 01/2024 நாள்: 27.02.2024

பொருள்: மனைப்பிரிவு – திருவண்ணாமலை மாவட்டம் – பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியம் – நெடுங்குணம் ஊராட்சி கிராம சர்வே எண்:20/6A2–ல் 0.91ஏக்கர் (ஹெக்டேர்.0.37.00) பரப்பில் அமைந்துள்ள ஸ்ரீ சாய் சிவசக்தி நகர் குடியிருப்பு மனைப்பிரிவினை திருவண்ணாமலை நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்டது – ஊராட்சி மன்ற தீர்மானம் இயற்றி இறுதி ஒப்புதல் வழங்குதல் – சார்பாக.

பார்வை: 1. திருவண்ணாமலை மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் எண்:47/2024/தி.மலை, நாள்:20.02.2024. இணையதள விண்ணப்பம் எண்: CJU4WHTP / 2024 / TVM

2. மனுதாரர் திரு.தி.அரிக்குமார் மற்றும் திரு.கோ.சரவணன், அவர்களின் கடிதம், நாள்:20.01.2024.

3. நெடுங்குணம் ஊராட்சி மன்ற தீர்மாண எண்:173/2024, நாள்:26.02.2024.

*****

உத்தரவு:

பார்வை 1–ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் திருவண்ணாமலை அவர்களின் கடிதத்தில், பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியம் நெடுங்குணம் ஊராட்சிக்குட்பட்ட சர்வே எண்: 20/6A2–ல் 0.91ஏக்கர் (ஹெக்டேர்.0.37.00) பரப்பளவில் **ஸ்ரீ சாய் சிவசக்தி நகர்** குடியிருப்பில் அமைந்துள்ள **29** மனைகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

பார்வை2–ல் காணும் கடிதத்தில் கட்டமங்கலம் கிராமம் மாரியம்மன் கோவில் தெருவைச் சார்ந்த மனுதாரர் திரு.தி.அரிக்குமார் மற்றும் திரு.கோ.சரவணன், என்பவர்களின் நெடுங்குணம் ஊராட்சிக்குட்பட்ட சர்வேஎண்:20/6A2–ல் 0.91ஏக்கர் (ஹெக்டேர்.0.37.00) பரப்பளவில் அமைந்துள்ள **29** மனைகளுக்கு இறுதி ஒப்புதல் அளிக்ககோரியுள்ளார்.

திட்டமில்லாபகுதி / திட்டப்பகுதியில் அமையும் மனைப்பிரிவுக்கான கூராய்வு கட்டணமாக ரூ.1000/–, தனிமனைக்கான கட்டணம் ரூ.29000/–, மற்றும் இடத்தின் சந்தைமதிப்பில் 3% தொகையை நிலப்பயன் மாற்றக் கட்டணமாக ரூ.9045/– மட்டும் இணையதள மூலம் செலுத்தப்பட்டுள்ளது. எனவே சர்வே எண்:20/6A2–ல் 0.91ஏக்கர் (ஹெக்டேர்.0.37.00) பரப்பளவில் அமைந்துள்ள **29** மனைகளுக்கு இறுதி ஒப்புதல் வழங்க பார்வை 3–ல் கண்டவாறு நெடுங்குணம் கிராம ஊராட்சியில் தீர்மாணம் நிறைவேற்றப்பட்டதால் மேற்படி மனைகளுக்கு நில மேம்பாட்டாளர் பத்திரபதிவு அலுவலகத்தில் விற்பனை செய்து கொள்ள கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு கிராம ஊராட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

த.பி.பா..

நிபந்தனைகள்:

1. வரைபடத்தில் உள்ளவாறு வீட்டுமனைகள் **1** முதல் **29** வரை அங்கீகரிக்கப்படுகிறது.

2. கூடுதல் மனைகள் செய்ய வேண்டியிருப்பின் அல்லது வரைபடத்தில் மாறுதல் வேண்டியிருப்பின் ஊராட்சியின் அனுமதியுடன் மாறுதல் செய்யப்பட வேண்டும்.

3. ஊராட்சியின் அனுமதி இல்லாமல் நீலவரைபடத்தை திருத்தவோ மாற்றியமைக்கவோ கூடாது.

4. வரைபடத்தில் மாறுதல் செய்யவேண்டியிருப்பின் அதற்குரிய கட்டணத்தைச் செலுத்தி வரைபடத்தை மாறுதல் செய்து கொள்ள வேண்டும்.

5. வீட்டுமனைகள் பற்றிய இதர ஆவணங்களையும் நீலமனைப்பிரிவு வரைபடத்தையும் நிர்வாக அலுவலர் மற்றும் தலைவர் கேட்கும்போது காண்பிக்கப்பட வேண்டும்.

6. பத்திரத்தில் பதிவு செய்துள்ள இடத்திற்கு மட்டுமே வீட்டு மனைகள் அங்கீகரிக்கப்படும்.

V. [illegible] 27/12

தலைவர்
நெடுங்குணம் ஊராட்சி
பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியம்

தலைவர் / நிர்வாக அதிகாரி
நெடுங்குணம் ஊராட்சி
பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியம்

பெறுநர்:

திரு.தி.அரிக்குமார் மற்றும் திரு.கோ.சரவணன்,,
எண்.228, மாரியம்மன் கோவில் தெரு,
கட்டமங்கலம் கிராமம் ,
திருவண்ணாமலை மாவட்டம்.

நகல்: ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), செய்யாறு கோட்டம்.

நகல்: வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), ஊராட்சி ஒன்றியம் பெரணமல்லூர் .

நகல்: அ3 இருப்பு கோப்பிற்கு.